சொல்லி பொதுமக்களிடமிருந்து புகார் வந்துள்ளது? வந்த புகாரின் அடிப்படையில் அவரை மாற்றியிருப்பதாகத் தெரிவித்தார்கள். அவர் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அந்த நிர்வாக அதிகாரியின் பெயர் மாணிக்கம். அவர் மீது 7 புகார்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் 6 புகார்கள் ஆதாரம் இல்லை என்று விசாரணையிலிருந்து தெரியவந்திருக்கிறது. ஒரு புகாரைப் பொறுத்தவரையில் அவர் அந்தப் பகுதியிலே அனுமதி இல்லாமல் கோழி, ஆடுகளை வளர்த்து வந்தார் என்பது. அது தவறு. அதை ஒட்டி மேலும் அந்தப் பகுதி மக்கள் புகாரையும் குறைகளையும் தீர விசாரிப்பதற்காக அவர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, அந்த ஆலயத்திலே மணியமாகப் பணியாற்றிய திருநாவுக்கரசு என்பவரை அந்த நிர்வாக அதிகாரி பழிவாங்கும் நோக்கத்துடன் நீக்கிவிட்டார் என்பதற்காக அவர் 12—7—1980 அன்று உண்ணாவிரதம் இருந்த தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற மூலக்கேள்வி புகாரைப் பற்றியது. அந்தப் புகார்களைப் பற்றிய விளக்கமும் பதிலும் இருக்கிறது. இப்போது ஒரு புதிய விளக்கத்தைத் தருகிறார். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தர முடியும்.

SANDAL WOOD OIL FACTORY IN NORTH ARCOT DISTRICT

*Q. 33; THIRU G. VISWANATHAN and THIRU B. SUNDARAM : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state:

a) whether there is a proposal to start a sandal wood oil factory in North Arcot District: and

b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :—

(அ) ஆம்.

(ஆ) ஆண்டொன்றுக்கு 5.2 டன் சந்தனத் தைலம் எடுக்கும் திறன் கொண்ட சந்தனத் தைலத் தயாரிப்பு ஆலை ஒன்றை ரூ. 22.85 இலட்சம் செலவில் வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூருக்கு அருகே அமைக்க முடிவு செய்யப்பட்டு துவக்க

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆலைக்குத் தேவைப்படும் சுமார் 104 டன் சந்தன மரங்கள் வனத்துறையால் வழங்கப்படும்.

திரு. தி. அன்பழகன்: தலைவரவர்களே, திருப்பத்தூரில் அமைக்கப்பட இருக்கிற இந்தச் சந்தனத் தொழிற்சாலை எப்போது தொடங்கப்படும்? அதிலே எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படும் என்ற தகவலை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையைத் தொடங்குகின்ற 'டான்சி' தமிழ் நாடு சிறுதொழில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆரம்ப அறிக்கையை தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை கிடைத்த பிறகுதான் அந்த விவரம் கிடைக்கும்.

திரு. சி. கோபால்: தலைவரவர்களே, இப்படி ஆரம்பிக்கிற இந்த சந்தனத் தொழிற்சாலையில் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற அளவிற்கு திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, முன்னாலே கேட்ட மாண்புமிகு உறுப்பினர் இதே கேள்வியைத் தான் கேட்டிருக்கிறார். அதே பதிலை இந்தக் கேள்விக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, தொழிற்சாலையை ஆரம்பிப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே சந்தன மரங்கள் ஏற்றுமதி நடைபெறவில்லை. இங்கே தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரிலிருந்து தகவல் வந்திருக்கிறதா? அப்படியானால் வட ஆற்காடு மாவட்டத்திலும் சந்தன மரங்கள் அதிகமாகக் கிடைக்கின்ற வேறு பல மாவட்டங்களிலும் சந்தன தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, சந்தன மரங்களை வைத்து தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று அறிவுரைகள் அல்லது ஆலோசனைகள் மத்திய அரசிலிருந்து வரவில்லை. ஆனால் சமீப காலத்தில் மத்திய அரசு முழுமையாக சந்தன மரம் ஏற்றுமதிக்கு தடை விதித்திருக்கிறது. அதற்கு அவர்கள் சொல்கின்ற காரணம், இங்கேயே உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்களை அனுப்பலாம்; ஆனால் மூலப் பொருட்களை அனுப்பக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் வருடத்திற்கு 1,500 டன் மரங்கள் சேகரிக்கிறோம் இந்த 1,500 டன் மரங்களுக்கும் அடிப்படையான தொழிற்சாலை

களை அமைப்பது என்பது சமீபத்தில் இயலாத ஒன்று. அப்படியே ஒரு வேளை தொழிற்சாலைகளை அமைத்தாலும் மரங்களாக ஏற்றுமதி செய்யும் அளவுக்கு ஆதாயம் கிடைக்குமா என்பது சந்தேகம். ஆகவே இது விரிவாக பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9. 10]

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய சந்தன மரத்தில் மைசூரிலிருந்து கிடைக்கூடிய சந்தன மரத்தை விட ஆயில் சத்து குறைவு என்று சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் அரசிடம் இல்லை.

திருமங்கலம் நகராட்சிக்குக் குடிநீர் வழங்கல்.

*வினா எண் 34—திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருமங்கலம் நகராட்சிக்கு வைகை ஆற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) திருமங்கலம் நகராட்சி மறறும் வழித்தட கிராமங்களாகிய (1) முள்ளிப்பள்ளம், (2) தென்கரை, (3) மேலக்கால் மற்றும் (4) கோக்குளம் ஆகியவைகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூபாய் 62.49 லட்சத்தில் திட்டம் அமைக்கவும் மேற்கண்ட திட்டத்தை வருடத்திற்கு ரூபாய் 1.524 லட்சத்தில் பராமரிக்கவும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேற்கண்ட நகராட்சிக்கும், ஊராட்சிகளுக்கும் திட்டம் பற்றிய விவரங்களைத் தெரிவித்து ஊராட்சிகளின் தீர்மானம் கோரப்பட்டது. திருமங்கலம் நகராட்சி திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மற்ற ஊராட்சிகளிலிருந்து தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் நகராட்சி ஆய்வாளர் அவர்களை இத்திட்டத்தை செயல்படுத்த திருமங்கலம் நகராட்சியின் நிதி நிலைமை பற்றிய விபரம் கோரப்பட்டுள்ளது